**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 332 **நாள்:** 27.07.2026

**மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் அவர்கள் ரெட்டைமலை சீனிவாசன் சாலையில் ரூ.48.34 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரண்டு இலவச ஒப்பனை அறைகளை இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அண்ணாநகர் மண்டலம், வார்டு-99, புரசைவாக்கம், ரெட்டைமலை சீனிவாசன் சாலையில் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூபாய் 48.34 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரண்டு இலவச ஒப்பனை அறைகளை மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் அவர்கள் இன்று (27.07.2026) மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த ஒப்பனை அறையில் ரூ.19.59 இலட்சம் மதிப்பீட்டில் ஆண்களுக்கு 6 கழிப்பிட இருக்கைகளும், மாற்றுத்திறனாளி ஆண்களுக்கு 1 கழிப்பிட இருக்கையும், ரூ.28.75 இலட்சம் மதிப்பீட்டில் பெண்களுக்கு 4 கழிப்பிட இருக்கைகளும், மாற்றுத்திறனாளி பெண்களுக்கு 1 கழிப்பிட இருக்கையும் அமைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திடீர் நகர் பகுதியில் புதிதாக கட்டப்படவுள்ள அடுக்குமாடி குடியிருப்புப் பகுதியைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்களிடம் தேவைகள் குறித்து கேட்டறிந்து கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**